# பாடம் 8 :விடியும் வேளை

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான பலூன்களை எடுத்துப் பொருத்துக.




Answer:



## சரியான சொல்லைத் தெரிவு செய்க.

Question 1.
சாலையெங்கும் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………….

அ) சாலை + யெங்கும்
ஆ) சாலை + எங்கும்
இ) சால + எங்கும்
ஈ) சால + யெங்கும்

Answer:
ஆ) சாலை + எங்கும்

Question 2.
சுண்டியிழுக்கும் இச்சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ……………………….

அ) சுண்டி + யிழுக்கும்
ஆ) சுண் + டியிழுக்கும்
இ) சுண்டு + இழுக்கும்
ஈ) சுண்டி + இழுக்கும்

Answer:
ஈ) சுண்டி + இழுக்கும்

Question 3.
ஓடி + ஆடி என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………………….

அ) ஓடிஆடி
ஆ) ஓடியோடி
இ) ஓடியாடி
ஈ) ஓடியாடி

Answer:
இ) ஓடியாடி

Question 4.

காலை + பொழுது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………………

அ) காலை பொழுது

ஆ) கால்பொழுது

இ) காலைப்பொழுது

ஈ) காலப்பொழுது

Answer:

இ) காலைப்பொழுது

Question 5.

வரகு + அரிசி என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் …………..

அ) வரகரிசி

ஆ) வரகு அரிசி

இ) வரக்கரிசி

ஈ) வரகுகரிசி

Answer:

அ) வரகரிசி

Question 6.

உணவு + அளிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………………

அ) உணவு அளிக்க

ஆ) உணவளிக்க

இ) உணவுவளிக்க

ஈ) உணவ்வளிக்க

Answer:

ஆ) உணவளிக்க

## வினாக்களுக்கு விடையளி

Question 1.
அழகிய மலைக் கிராமத்தின் பெயர் என்ன?
Answer:
அழகிய மலைக்கிராமத்தின் பெயர் மன்னவனூர் ஆகும்.

Question 2.
கிராமத்தில் உனக்குப் பிடித்த இயற்கைக் காட்சிகளை எழுதுக.
Answer:
மழை பெய்து ஓய்ந்திருந்தது, சாலையெங்கும் தண்ணீர் நிறைந்திருந்தது. மரங்கள் நனைந்து கிளைகள் இலைகள் முழுக்க நீர்த்திவலைகள் தெரிந்தன. பச்சைப்பசேல் என்ற வயல்வெளிகள் எங்கும் காணப்பட்டன. இவை எனக்குப் பிடித்த இயற்கைக் காட்சிகள் ஆகும்.

Question 3.
பிள்ளைகள் காலை உணவாக என்ன உண்டார்கள்?
Answer:
பிள்ளைகள் காலை உணவாக, வரகரிசிச் சோறும் பருப்புக் கடையலும் பிரண்டைத் துவையலும் சாப்பிட்டனர்.

## பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள வருணனைச் சொற்களை எடுத்து எழுதுக

எ.கா:
பச்சைப்பசேல் என்ற வயல்வெளி
சிலுசிலுப்பான காற்று கூடவே எழுந்தது.
வாய்க்காலும் வரப்பும் நிறைந்த வயல்
கருத்த மண்சட்டியில் வெள்ளை வெளேரென வரகரிசிக்சோறு கொதித்துக் கொண்டிருந்தது.

## உரைப்பகுதியை படித்து வினாக்களுக்கு விடையளிக்க

சிறு தானிய உணவுகளே நம் உடல் நலத்திற்கு ஏற்றவை. குதிரை வாலி அரிசி, தினை, வரகரிசி, கேழ்வரகு, கம்பு, சோளம், பனிவரகு அரிசி, மாப்பிள்ளை சம்பா அரிசி, போன்றவை சிறு தானியங்கள் ஆகும். இந்தச் சிறு தானியங்களைக் கொண்டு பல உணவு வகைகளை மண் பானைகளில் சமைத்துப் பயன்படுத்துவது மிகவும் நல்லது. நாம் உண்ட உணவு முழுமையாகச் செரித்தபிறகுதான் அடுத்த வேளை உணவை உண்ண வேண்டும். இதைத் தான் நம் முன்னோர் "பசித்துப் புசி" என்றனர். இவற்றைத் தவிர்த்துவிட்டுத் துரித உணவுகளைச் சாப்பிடத் தொடங்கியதே பல்வேறு நோய்கள் ஏற்படக் காரணமாகிறது. சிறு தானிய உணவுகளை உண்போம்! வளமான வாழ்வைப் பெறுவோம்!




Question 1.

எவ்வகை உணவு முறை நமக்கு ஏற்புடையது?

Answer:

சிறுதானிய உணவுகளே நமக்கு ஏற்புடையது.

Question 2.

சிறு தானியங்களுள் எவையேனும் நான்கு எழுதுக.

Answer:

தினை, வரகரசி, கேழ்வரகு, கம்பு.

Question 3.

துரித உணவு வகைகளை உண்ணக் கூடாது, ஏன்?

Answer:

துரித உணவு வகைகள் பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைவதால் அவைகளை உண்ணக் கூடாது.